


மலர் 2 ஏப்ரல் 2017 / Avril 2017 இதழ் 2

# உதவும் கரங்கள் இணையட்டும்!

ஆயுதப்போர் முடிவிற்கு வந்து எட்டு வருடங்கள் கடந்துவிட்டன. மாபெரும் மனிதப் பேரலவங்களுடனும் - பொருளாதார, சமூக, பண்பாட்டு சிதைவுகளுடனும் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போரின் வெப்பம் இன்றும் எங்கள் தாய்நிலத்தில் பல்வேறு வடிவங்களில் உணரப்படுகின்றது. பல்வேறு போர் முடிவுபெற்ற பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற கூட்டான சர்வதேச முன்முயற்சிகள் எதுவுமே எங்கள் தாயகத்தின் மீள்நிர்மாணத்திற்காகவும், மக்களின் பாதுகாப்பான மீள் துளிர்வுக்காகவும் நடத்தப்படவில்லை. அங்கும், இங்குமான சில நாடுகளின் உதவிகள் பிரேரிக்கப்பட்ட போதும் அது கூட்டான - போரின் தாக்குதலால் நெரியுண்ட தமிழ் சமூகத்திற்கு அல்லது வடக்குக்கிழக்கினை தாயகமாகக் கொண்ட மக்களிற்கான சர்வதேச நடவடிக்கையாக அமையவில்லை. போரினை நடாத்திய சிறீலங்கா அரசின் வழிகாட்டலில் - போரின் மறுதரப்பான தமிழ்சமூகத்தின் மறுவாழ்வுக்கும், பொருளாதார மீட்சிக்கும் உதவிகளை வழங்குவது என்பதன் அபத்தத்தினை தாயகத்தின் இன்றைய காட்சிகள் சான்று பகர்கின்றன.

எட்டு ஆண்டுகளின் பின்னான வடக்குக்கிழக்கு நிலைமையை உலக வங்கியும் - சிறீலங்காவின் மத்திய வங்கியும் 'இலங்கைத் தீவின் வறுமை மிகுந்த பிரதேசங்கள்' எனவும் 'வேலை வாய்ப்புக்கள் மிகக் குறைந்த - குடும்ப கடன் சுமை கூடிய பிரதேசங்கள் எனவும் விபரிக்கின்றது. வடக்குக்கிழக்கில் 90000 போர் விதவைகள் வறுமையுடனும் நாளாந்த பாலியல் வன்முறை அச்சங்களுடனும் வடக்குக்கிழக்கில் வாழ்வதாக அமெரிக்க செய்தி ஆய்வொன்று விபரிக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய சர்வதேச கணக்கெடுப்புக்கள் இல்லாத இடம் இலங்கை எனக் குற்றஞ்சாட்டுகின்றது மற்றதொரு சர்வதேச அறிக்கை. இன்னமும் 60000 மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளுக்குப் போகமுடியாது கடுமையான சமூகப் பொருளாதாரச் சிக்கலுக்குள் வாழ்வதாக இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான அறிக்கையொன்று கூறுகின்றது. பாதுகாப்பு, வாழ்வாதாரச் சிக்கல்கள் என்பன இம்மக்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் என்கின்றது இந்த அறிக்கை. வறுமை, வேலைவாய்ப்பின்மை, கடன், கல்வி, பாதுகாப்பு, சுகாதார வசதிகள் என எம் உறவுகள் பலவித அழுத்தங்களுக்குள் தள்ளாடுகின்றனர்.(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# சிலோன் சகோதரர்கள் - பிரான்ஸ், வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக மேம்பாட்டுத்திட்டங்கள்

உறவுகளை இழந்த மூதாளர்கள் பராமரிப்புத் திட்டம் நமச்சிவாய மூதாளர் பேணலகம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உறவுகளை இழந்த மூதாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை கருத்திற் கொண்டு அவர்களின் கடைசிக்காலத்தில் நிம்மதியான ஒரு வாழ்வை வழங்கும் பொருட்டு 15.09.2015ம் ஆண்டு பிரான்ஸ் உறவுகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் தருமபுரம் கிராமத்தில் நமச்சிவாய மூதாளர் பேணலகம் தொடங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது.



இங்கு தற்போது 22 மூதாளர்கள் பராமரிக்கப்படுவதுடன் அவர்களுக்கான உணவு, உடை, வைத்திய வசதிகள் மற்றும் உளவளத்தை மேம்படுத்து வதற்கான செயற்பாடுகள், ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதுடன் கிறிஸ்தவமதத்தைப் பின்பற்றுவர்களுக்கு அவர்களுக்கான வழிபாடுகளும் சிறந்த முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 8ம் பக்கம்)

# நமசிவாய மூதாளர் பேணலகம்
# NAMACHIVAYA HOME FOR ELDERS

திட்ட முன்மொழிவு

திட்டத்தின் பெயர் : நமச்சிவாய மூதாளர் பேணலகத்திற்கான கட்டிடம் அமைத்தல்
திட்டப் பிரதேசம் : கிளிநொச்சி மாவட்டம் / கண்டாவளை
பிரதேச செயலாளர் பிரிவு : இல 444 முல்லைபரந்தன் வீதி, தருமபுரம்.
நடைமுறைப்படுத்தல் : நமச்சிவாய மூதாளர் பேணலக பவுண்டேசன் / namachivayahfe@gmail.com
திட்ட மொத்த நிதி : 4.75Million (Ground Floor)

## திட்டத் தேவையின் முக்கியத்துவம்

யுத்த வன்செயல் காரணமாக அதிகளவு பாதிக்கப்பட்ட மாவட்டமான கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள சில மூதாளர்களின் பிள்ளைகள் யுத்ததில் இறந்துவிட்டனர். இதன்காரணமாக கடைசிக் காலத்தில் தங்களை பராமரிக்கவேண்டிய பிள்ளைகள் இன்மையால் சில முதியோர்கள் வைத்தியசாலையிலும், பொது இடங்களிலும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

இந்த விடயங்களை கருத்திற்கொண்டு பிரான்ஸ் வாழ் உறவுகள் நமச்சிவாய மூதாளர் பேணலகத்தை 15.09.2015ம் ஆண்டு ஓர் வாடகைக் கட்டிடத்தில் தொடங்கி வைத்து மூதாளர்களின் பராமரிப்புக்கான மாதாந்த நிதிகளும் வழங்கப்பட்டு இத்திட்டம் கொண்டுசெல்லப்படுகின்றது. தற்போது இருப்பதிரெண்டு மூதாளர்கள் பராமரிக்கப்பட்டுவருகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவை பொறுத்தவரை முதியோர் இல்லம் மிக முக்கிய தேவையாக காணப்படுகின்ற படியாலும், தற்காலிகமாக தொடங்கப்பட்ட கட்டிடமானது முதியோர் பராமரிப்புக்கு ஏற்புடையதாக இன்மையாலும், பிரதேச செயலகங்களால் மேலும் சிலரை இணைக்கும்படி கோரப்படுகின்ற போதிலும் இடப்பற்றாக்குறையால் இணைக்கமுடியாமல் இருப்பதாலும் இம்மூதாளர்க்கென தனித்துவமான கட்டிடம் ஒன்றை அமைக்கவேண்டிய தேவை கருதி கிளிநொச்சியில் தருமபுரம் கிராமத்தில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு கட்டுமான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுவருகின்றது. இக்கட்டுமானத்தை பொறுத்தவரை தற்போதைக்கு அவசியமாகவுள்ள முதல்தளத்தை பூரணப்படுத்தின ாலே போதுமானது. இருந்தாலும் இதற்கு அதிகளவு நிதி தேவைப்படுகின்றது.

எனவே அனைவரும் முடியுமான பங்களிப்புக்களைச் செய்வதுடன் பிரான்ஸ் உறவுகளினால் தொடங்கப்பட்ட இம்மூதாளர் பேணலகமானது நீடித்து நிலைத்து நின்று மூதாளர்களுக்கான நல்வாழ்வு மட்டுமன்றி பலதரப்பட்ட சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







# நமச்சிவாய மூதாளர் பேணலக கட்டுமானப் பணிக்கான நிதி உதவி கோரல்

பிரான்ஸ் உறவுகளின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தருமபுரத்தில் செயற்படும் மூதாளர் பேணலகத்தில் தற்போது 22 மூதாளர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு உணவு, உடை, வைத்தியம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கும், மற்றும் கட்டிட பராமரிப்பு, எரிபொருள் பணியாளர் கொடுப்பனவு, மின்சாரக் கட்டணம் போன்ற பல்வேறுபட்ட தேவைகளுக்கு மாதாந்தம் சராசரியாக ரூபா 175,000- நிதி தேவையாக உள்ளது.

இதன்படி பிரான்ஸ் உறவுகள் மாதாந்தம் அனுப்பும் பிரதான நிதி உதவியைக் கொண்டும் ஏனைய நலன்விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் சிறு அன்பளிப்புக்களைக் கொண்டும் இத்திட்டத்தை முடியுமான வரை சிறப்பாக கொண்டுசெல்கின்றோம்.

இம் மூதாளர்களை தற்காலிகமாக ஓர் வாடகை வீட்டிலே வைத்தே பராமரித்து வருகின்றோம். இது தங்களுக்கு நன்கு தெரியும் இந்தவருடத்துடன் கட்டிடத்தை விட்டு வெளியேறுமாறு கட்டிட உரிமையாளர் தெரிவித்து சில அசௌகரியங்களையும் ஏற்படுத்தி வருகின்றார்.


எனவே, இம்மூதாளர்களுக்கு தனித்துவமான ஓர் கட்டிடம் அமைக்கப்படவேண்டியது மிக முக்கியதேவையாக உள்ளது. பிரதேச செயலகங்கள் மேலும் சில முதியோர்களை இணைக்கும்படி எங்களைக் கோரிவருகின்றனர். நாங்கள் நிதிப்பறாக்குறை மற்றும் ஒழுங்கான கட்டிட வசதி இன்மையால் பொறுப்பெடுக்கவில்லை.

இதன்படி எமது இம் மூதாளர்களுக்கு ஓர் கட்டிட தேவையினை கருத்திற்கொண்டு காணி ஒன்று முதியோர் இல்லத்தின் பெயரில் தருமபுரம் கிராமத்தில் கொள்வனவு செய்து செயற்பட்டு கட்டுமானப் பணிக்கான நிதியை பலரிடம் கோரிவருகின்றோம். இக்கட்டுமானப் பணியை நிறைவு செய்வதற்கு மொத்தமாக அறுபது இலட்சம் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஹரோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமானது அவர்களால் முடிந்த தொகையான ரூபா பத்து இலட்சம் நிதியை அன்பளிப்புச் செய்திருந்தனர். இதன்படி காணி துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அத்திபாரக்கல் வைக்கும் நிகழ்வு 15.03.2017 ம் திகதி நடைபெற்றது.

எனவே பிரான்ஸ் உறவுகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட மேற்படி மூதாளர் பேணலக கட்டுமான பணிக்கான தேவையிலுள்ள நிதியை முடியுமானவரை ஒழுங்குபடுத்தி வழங்குமாறு இங்குள்ள மக்கள் சார்பாக பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.






(உதவும் கரங்கள் ....... தொடர்ச்சி)
இது எமது தமிழ்சமூகத்தின் இருப்பை பலவீனப்படுத்தி மீளமுடியாத சூழலிற்குள் எமது தாயகத்தினை தள்ளுகின்றது.

எமது உறவுகள் இவ்வாறு முறையான சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைககளோ, பிற நிரந்தர நிறுவன மயப்பட்ட உதவிகளோ இல்லாது துன்புறுவதற்கும், தோல்வியடைவதற்கும் எதிராக செயற்படவேண்டிய காலக்கடமை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்திற்குண்டு. உடனடி நிவாரணங்கள் என்கின் வடிவத்தினைத் தாண்டி நீண்டகால நோக்குக் கொண்ட மனிதநேய உதவிகளை தாயக மக்களிற்கு வழங்குவது இன்றுள்ள மிகவும் முக்கிய சவாலாகும்.

போரினால் பாதிக்கப்பட்டு சிதைந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து தங்குநிலை வாழ்வு மனநிலையில் இருந்து விடுபட்டு கல்வியிலும், விவசாயத்திலும், உற்பத்தியிலும், வணிகத்திலும் மாற்றத்தைஉருவாக்கநேரத்தையும் உழைப்பையும் மூலதனமாக்க வேண்டும். அதற்கான வளம் துறை சார் நிபுணத்துவம் புலம்பெயர்வாழ் சமூகத்திடம் நிறைய உள்ளது. என வே குறுங்கால மற்றும் மத்திமகால திட்டங்களை தன்னகத்தே கொண்டு நீண்டகால இலக்கு நோக்கி நகரவேண்டும். சமூக நலனை முன்னிறுத்தி செயற்படும் நபர்கள், அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் முன்னெடுக்கலாம்.

தாயக மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டங்கள் நில வழத்திற்கு அமைவாக மேற்கொள்ளப் படவேண்டும். இவை போரினால் அழிந்து போயுள்ள சமூக கட்டுமான ங்களை மீள நிலை நிறுத்துவதோடு, தன்னிறைவு நிலைக்கு வழிகாட்டுவதாக அமையவேண்டும். இவற்றிற்கு, தம்மாலான சகல உதவிகளையும், ஆதரவுகளையும் புலம்பெயர் அமைப்புக்கள் தமக்கு நம்பிக்கையான நபர்கள் மற்றும் அமைப்புக்கள் ஊடாக வழங்க வேண்டும். இது புலம்பெயர் சமூகத்தின் தார்மீக பொறுப்பும் கடமையுமாகும். (முற்றும்)

BILL 0F QUANTITES FOR COMPLETION OF THE PROPOSED STORIYED BUILDING FOR NAMACHIVAYA HOME FOR ELDERS.

| Item | Description | Unit | Qty. | Rate | Amount |
|---|---|---|---|---|---|
| | **A - Excavator** | | | | |
| 1 | Excavation in trenches for walls / column pits in ordinary soil | Cube. | 14.50 | 2,250.00 | 32,625.00 |
| 2 | Filling Under approved quality filling spread watered and well rammed. | Cube. | 26.80 | 3,250.00 | 87,100.00 |
| 3 | Allow for Polythene waterproofing membrane 1000 Gauge with 150 mm lap lay underneath the concrete floor. | Sq.ft. | 795.00 | 40.00 | 31,800.00 |
| | **B - Concretor** | | | | |
| 4 | 75mm thick 1:3:6(25mm) cement concrete screed in foundation | Cube. | 2.85 | 13,250.00 | 37,762.50 |
| 5 | 100mm thick and 450 mm breadth,1:3:6(25 mm) strip cement concrete ,reinforced with 03 Nos.10 mm dia. Longitudinal Torsteel bars, tied with S-type ties in 6 mm dia. MS round steel bars @ 12" crs.under neath of the rubble foundation. | Cube. | 1.20 | 19,750.00 | 23,700.00 |
| 6 | Floors, cement concrete 1:2 1/2:5 (25 mm), 75mm thick, with expansion joints filled with cement and sand. | Sq.m | 3.35 | 14,500.00 | 48,575.00 |
| 7 | 1: 2: 4 (20mm) RCC concrete 300 mm thick footings of the base columns reinforced with8T12 @ 150 mm crs. tor steel bars in both directions. | Cube. | 2.75 | 45,000.00 | 123,750.00 |
| 8 | 1:2:4(20mm) cement concrete in 225mmx225mm Columns in ground floor ,reinforced with 4T16 mm dia.torsteel and 6 mm ms rods at 150 mm crs. Rate to include for formwork in filmface plywood, 100x50mm class II joists and necessary props and for removal and stacking. | Cube. | 1.40 | 110,000.00 | 154,000.00 |
| 9 | 1:2:4(20mm) cement concrete in 225mmx300mm Beam upto 1st floor level,reinforced with 4T12 mm dia.torsteel and 6 mm ms rods at 150 mm crs. Rate to include for formwork in filmface plywood, 100x50mm class II joists and necessary props and for removal and stacking. | Cube. | 2.05 | 115,000.00 | 235,750.00 |
| 10 | RCC beam 9" x18" in 1:2:4 (3/4") cement concrete , reinforced with 2T12mm dia.torsteel bars at top as hanging bars ,2T16 mm dia. torsteel Bars cranked and 3T20 mm dia.torsteel straight bars at bottom as tension bars with10mm dia. round mild steel stirrups at 6" centres. | L.ft | 52.50 | 1,050.00 | **55,125.00** |
| 11 | 125mm thick RCC floor slab in 1st floor,1:2:4(20mm) cement concrete in,reinforced with T10 mm dia.torsteel main bars at 200 mm centres and T10 mm dia. Torsteel distribution bars at 200 mm centres together with tension bar arrangements over beams and walls for quarter span length. Rate to include for formwork in filmface plywood, 100x50mm class II joists and necessary props and for removal and stacking. | Cube. | 8.45 | 110,000.00 | 929,500.00 |
| 12 | Staircase in 1:2:4(20mm) cement concrete 3150 mm ascending height and 1000 mm breadth,110 mm waist, 100 mm thick half - landing having 225 mm tread and 150 mm rise steps .Reinforced with 12 mm dia. Torsteel main bars at 150 mm centres and 10 mm dia.torsteel transverse bars at 200 mm centres.Rate to include for formwork in filmface plywood, 100x50mm class II joists and necessary props and for removal and stacking and 10 mm thick plastering in 1:2 cement mortar and lime puttying soffit.Providing 75 mmx 40 mm beaded hand rail and 50 mm dia.x750 mm height blusters in sp.Cl. upper tinber including 02 coats of Vanish painting. | No. | 1.00 | 98,335.00 | 98,335.00 |
| | **C - Rubble Masonry** | | | | |
| 13 | Random rubble masonary in 1:5 cement mortar in foundation. | Cu.m | 10.90 | 23,500.00 | 256,150.00 |
| | **D - Brick Layer** | | | | |
| 14 | 225mm thick Brick wall in 1:8 cement mortar in ground floor. | Cube. | 14.50 | 24,500.00 | 355,250.00 |
| 15 | Steps, 342mm wide and 150mm to 225mm high brick work in 1:5 cement mortar, rendered 12mm thick 1:2 cement and sand with necessary excavation.. | | 39.00 | 900.00 | 35,100.00 |
| | **E - Pavior** | | | | |
| 16 | Glazed tile 600 mmx600 mm, Lanka tile flooring Supplied and laid. Rate to include for 20mm thick 1:2 cement mortar levelling screed etc. | Sqrs. | 13.40 | 24,000.00 | 321,600.00 |
| 17 | Glazed tile 300 mmx300 mm, non-skid type Toilet flooring Supplied and laid. Rate to include for 20 mm thick 1:2 cement mortar levelling screed etc. | Sqrs. | 0.40 | 24,000.00 | 9,600.00 |
| 18 | Tiles glazed - 300x450mm, supplied and fixed to walls including raking plaster and 16 mm thick bedding in 1:2 cement mortar. (Specials measured separately) | Sqrs. | 1.00 | 23,000.00 | 23,000.00 |
| 19 | Glazed tiles Skirting 100x12 mm thick inside and Outside bedded in 1:3 cement mix. | Lft. | 195.00 | 200.00 | 39,000.00 |
| | **F - Aluminium Fitter.** | | | | |
| 20 | Supplying and fixing Bronze Anodised Aluminium (Lanka / Alumex) 41mm Casement Doors with with Top Louver, including 5mm thick Clear glass pane and Aluminium combine panel for 1.0 Metre height all necessary accessories and fittings. All as per drawing. | Sq.ft. | 128.00 | 1,550.00 | 198,400.00 |
| 23 | Supplying and fixing Bronze Anodised Aluminium (Lanka / Alumex) 41mm Casement Window with Top Louver, including 5mm thick Tinted glass and all necessary accessories and fittings. All as per drawing. | Sq.ft. | 275.00 | 1,650.00 | 453,750.00 |
| 24 | Supplying and fixing Bronze Anodised Aluminium (Lanka / Alumex) 41mm Casement Partition with Aluminium combine panel including 5mm thick Clear glass pane and all necessary accessories and fittings. All as per detail drawing. | Sq.ft. | 192.00 | 1,050.00 | 201,600.00 |
| 25 | Chromium plated hand rail, 50 mm dia.Chro. pipes 40 mm dia pipes as blusters and 02 horizontal linings and completed in Staircase.. | Lft. | 133.50 | 1,750.00 | 233,625.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **G - Plasterer** | | | | |
| 26 | 20 mm thick 1:3 cement plastering to Plinth, finished smooth Redcolour cement floating | Sqrs. | 1.95 | 6,000.00 | 11,700.00 |
| 27 | 20 mm thick 1:3 cement plastering to internal and External faces , finished smooth. | Sqrs. | 39.50 | 5,500.00 | 217,250.00 |
| 28 | 10mm thick plastering to R.C.C. beam & slab soffit in cement & sand 1:3 including floating with lime putty. | Sqrs. | 6.90 | 7,250.00 | 50,025.00 |
| 29 | 20mm thick 1:2 cement & sand D.P.C. & finished smooth with 2 coats of hot tar blinded with coarse sand. | Sqrs. | 3.05 | 6,500.00 | 19,825.00 |
| 30 | Plaster reveals in 1:1:3 Lime cement mortar finished smooth to external and internal plaster on narrow widths not exceeding 150 mm width. | Lft. | 600.00 | 90.00 | 54,000.00 |
| | **H - Painter & Decorator** | | | | |
| 35 | Painting walls soffits of beams and slabs with one coat of Dulux Acrylic wall filler and two coats of wheather shield paint including preparing surface of new work. | Sqrs. | 48.50 | 2,600.00 | 126,100.00 |
| | **I - PLUMBER** | | | | |
| 37 | Closet pedestal type, with low level (Ceramic) flushing cistern flush pipe double plastic seat cover 20mm stop cock trap etc supplied & fixed with water supply and waste water connection all complete to working order | No. | 2.00 | 13,500.00 | 27,000.00 |
| 38 | Pillar tap 20mm chromium plated supplied and fixed to basin. Rate to include for fixtures. | No. | 2.00 | 1,050.00 | 2,100.00 |
| 39 | Pipes P.V.C 20mm dia. supplied & fixed.Type 1000, Rate to include for fixtures. | Lft. | 40.00 | 90.00 | 3,600.00 |
| 40 | Pipes P.V.C 32mm dia. supplied & fixed.(Type 1000), Rate to include for fixtures. | Lft. | 60.00 | 200.00 | 12,000.00 |
| | **J - Drain Layer** | | | | |
| 41 | Drains PVC 110mm laid on 1:3:6(25 mm) cement concrete bed 400 mmx 150mm thick upto 600mm depth of invert including excavation and cement conc. Hunching. | Lft. | 10.00 | 450.00 | 4,500.00 |
| 42 | Manhole 600x600mm and upto 600mm deep 225mm thick brick in cement 1:3 walls and cement rendered 12mm (1:2) with 150mm cement conc. Foundation 1:3:6(40) including forming channels, but without cover. | Lft. | 1.00 | 6,000.00 | 6,000.00 |
| 43 | Manhole cover reinforced 1:2:4 (20)conc. 75mm thick 600x600mm approx. supplied and fixed reinforced dia 6mm M/S at 75mm.centres both ways. | Lft. | 1.00 | 1,485.00 | 1,485.00 |
| 44 | Soakage pit 1200 mm dia.x3000 mm depth of invert , 225 mm thick brick work in 1:5 cement mortarHaving drainage cavity in vertical joints at alternative Courses and 225 mm x150 mm ring concrete foundation in 1:2:4(25 mm) cement concrete ,reinforced with 4/12 mm dia.torsteel bars and 6 mm dia. mildsteel stirrups at 150 mm crs,.and all the exposed surfaces rendered with 16 mm thick 1:2 cement mortar.provides the cover slab in 1:2:4(20 mm) cement concrete, reinforced with 10 mm dia.torsteel bars at 150 mm crs.in bothways, having a opening at the end of the sewerage pipe the SW tee fixed and the opening closed with conc. manhole cover having 12 mm dia.MS. handle for lifting. | Item | 1.00 | 56,500.00 | 56,500.00 |
| | **K-Electrical Installation** | | | | |
| 45 | Consumer power unit cosisting of 01 no. 30 Amp. main switch,01 no. 30 Amp.Trip switch, 02 nos. 10 Amp. MCB and 08 nos. 06 Amp. MCBB plus neautral and earth terminals wired complete in plastic enclosure. | No. | 1.00 | 15,000.00 | 15,000.00 |
| 46 | 05 Amp. Single switch socket outlet with PVC insulated copper cables and earth wires in PVC coduits. | No. | 8.00 | 2,500.00 | 20,000.00 |
| 47 | 15 Amp. Single switch socket outlet with PVC insulated copper cables and earth wires in PVC coduits. | No. | 12.00 | 2,750.00 | 33,000.00 |
| 48 | Ceiling fan 1400 mm sweep with speed regulator including accessories such as MS fan hook etc.and PVC insulated copper cables and earth wire ceiling fan outlet in PVC coduits. | No. | 6.00 | 8,500.00 | 51,000.00 |
| 49 | Fluorescent Lamp 1200 mm with standard accessaries such as 24 gauge G.I.shading, switches, sunk box,ceiling roses,holders, adapter ,chrominium plated M.S.chains,brass hooks and PVC insulated copper cables and earth wires in PVC coduits. | No. | 12.00 | 2,850.00 | 34,200.00 |
| 50 | Water tight Bracket lamp point wiring with standard accessaries such as switches, sunk box,ceiling roses,holders, shades and PVC insulated copper cables and earth wires in PVC coduits. | No. | 2.00 | 2,000.00 | 4,000.00 |
| 51 | Polished Aluminium Double Parabolic Luvers With Bulb (600mmx600mm') 3 Bulb with standard accessaries such as sunk boxand PVC insulated copper cables and earth wires in PVC coduits. | No. | 3.00 | 4,500.00 | 13,500.00 |
| 52 | Earth Electrode 50 mm dia.G.I. 1800 mm long and copper wired bolts ,Earth pits etc. ,fixed to approx. 150 mm beyond the building. | Item | 1.00 | 2,250.00 | 2,250.00 |
| 53 | Service Bracket Mildsteel angle iron 50 mmx50 mmx1.80 m long fixed to wall using 16 mm dia.x250 mm M.S.bolt | Item | 1.00 | 2,000.00 | 2,000.00 |
| 54 | Allow Sum to Ceylon Electricity Board for obtaining electrical connection Ac single phase from CEB supply point including all cables, equipment with connection up to main panel including with Watt hour meter etc. | Item | Sum | 22,500.00 | 22,500.00 |
| | **Total** Rs: | | | | **4,774,632.50** |

**Prepared By:**
**Eng. Velu Shanmuganathan,**
**7/8, Common road,**
**Akkaraipattu -8**

Eng. Velu Shanmuganathan
Registered Qualified
Person (03)
Alayadivembu
Pradeshiya Sabha
Akkaraipattu.







# Namachivaya Home for Elders Foundation

**Acknowledgement of fund received from 01.01.2017 to 31.03.2017**

**Note : 01**
Name of Donor : Ceylan fraternite- France

| No | Received Date | Receipt No | Amount Rs. |
|---|---|---|---|
| 01 | 2017.01.27 | 071 | 158,475.20 |
| 02 | 2017.03.07 | 074 | 250,000.00 |
| | **Total** | | **408,475.20** |

**Note : 02**
Cash Balance as at 31.03.2017

| No | Project Name | Cash in Hand | Cash at Bank Currents A/C | Cash at Bank Saving A/C |
|---|---|---|---|---|
| 01 | Construction of Elders Home | 19,089.00 | 883,840.00 | |
| 02 | Canalanka Dairy Farm Project | 52,956.00 | 144,100.00 | 10,000.00 |
| 03 | Livelihood Project Loan Project Funds | | 205,940.00 | 79,550.00 |
| 04 | Elders Maintenance Fund | 893.00 | 43,645.00 | |
| | **Total** | **72,938.00** | **1,277,525.20** | **89,550.00** |

SOLIDARITY FOUNDATION

# STA SOLIDARITY FOUNDATION

**Acknowledgement of fund received from 01.01.2016 to 01.12.2016**

**Name of Donor : Ceylan fraternite - France**

| No | Received Date | Receipt No | Amount Rs. | Expenditure | Amount Rs. |
|---|---|---|---|---|---|
| 01 | 2016.01.19 | 115 | 130,000.00 | Namachivaya Elders Home | 130,000.00 |
| 02 | 2016.02.19 | 136 | 130,000.00 | Namachivaya Elders Home | 130,000.00 |
| 03 | 2016.03.15 | 137 | 313,250.00 | Namachivay Elders Home (March & April) | 260,000.00 |
| | | | | Pre School Project - Vanni | 53,250.00 |
| 04 | 2016.03.21 | 138 | 52,000.00 | Special Meals ( Elders & Children Home) | 52,000.00 |
| 05 | 2016.05.30 | 132,133,134, | 300,000.00 | Namachivaya Elders Home | 264,000.00 |
| | | | | Special Meals ( Elders & Children Home) | 36,000.00 |
| 06 | 2016.07.18 | 139 | 320,000.00 | Namachivaya Elders Home | 130,000.00 |
| | | | | Registration Charge (MM Management Pvt ltd) | 190,000.00 |
| 07 | 2016.08.15 | 140 | 140,000.00 | Namachivaya Elders Home | 140,000.00 |
| 08 | 2016.09.21 | 141 | 166,000.00 | Namachivaya Elders Home | 166,000.00 |
| 09 | 2016.10.18 | 142 | 160,000.00 | Namachivaya Elders Home | 160,000.00 |
| 10 | 2016.12.10 | 143 | 130,000.00 | Namachivaya Elders Home | 130,000.00 |
| 11 | 2016.12.06 | 070 | 178,000.00 | Namachivaya Elders Home A/C Kilinochi | 178,000.00 |
| **Total** | | | **2,019,250.00** | | **2,019,250.00** |

நமச்சிவாய முதாளர் பேணலகம்
NAMACHIVAYA HOME FOR ELDERS
නමච්චිවාය වැඩිහිටි නිවාස

Tel : +94 (0)213204253
Email : namachivayahfe@gmail.com

No: 444/8, Paranthanmullai Road,
Tharumapuram, Kilinochchi, Sri Lanka

## NAMACHIVAY HOME FOR ELDERS FOUNDATION

**Receipts and Payments Accounts statement from 01.01.2017 to 31.03.2017.**

| Description | Note | Receipts Rs. | Payments Rs. |
|---|---|---|---|
| Cash at bank | | 185,590.00 | |
| Donation – ceylan fraternite- France | 01 | 408,475.20 | |
| Donation - Individual | | 230,250.00 | |
| Donation - Shri Siththivinayakar thevasthanam | | 1,020,840.00 | |
| Donation - Canalanka | | 573,100.00 | |
| Livelihood Project Fund | | 601,300.00 | |
| Tamil Seniors' Group of Etobicoke, Canada | | 70,620.00 | |
| | | | |
| **Namachivaya Home for Elders Foundation** | | | |
| Meals & Refreshments | | | 217,700.00 |
| Purchase of Maintenance Things | | | 100,129.00 |
| Staff Allowances | | | 133,000.00 |
| Traveling & Transport Expenses | | | 4,620.00 |
| Purchase of firewood & Kerosene | | | 8,115.00 |
| Three wheeler maintenance | | | 1,593.00 |
| Rent | | | 18,000.00 |
| Administrative Expenses | | | 4,500.00 |
| medical expenses | | | 1,090.00 |
| Stationery & Communications | | | 3,010.00 |
| Electricity Expenses | | | 17,000.00 |
| Miscellaneous | | | 65,000.00 |
| **Other Project** | | | |
| Construction of Elders Home | | | 117,911.00 |
| Canalanka Dairy Farm Project | | | 376,044.00 |
| Education Support Project | | | 81,050.00 |
| Livelihood Project | | | 450,000.00 |
| Miscellaneous - Livelihood Project | | | 51,400.00 |
| Cash in Hand – 31.03.2017 | 2 | | 72,938.00 |
| Cash at Bank - 31.03.2017 – Current A/C | | | 1,277,525.20 |
| Cash at Bank – 31.03.2017 – Saving A/C | | | 89,550.00 |
| | | **3,090,175.20** | **3,090,175.20** |

Prepared By : ............................ Accountant

Checked By : ............................ Manager

Approved By : ............................ Coordinator

NAMACHIVAYA HOME FOR ELDERS
No,448/8, Paranthanmullai Road,
Kilinochchi
Sri Lanka

(பிரான்ஸ் சிலோன் சகோதரர்கள்.....தொடர்ச்சி......)

### *உறவுகளை இழந்த பிள்ளைகள் பராமரிப்புத் திட்டம் "அம்மன் மகளிர் இல்லம்"*

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நிதிப்பற்றாக்குறையால் பிள்ளைகளுக்கான தேவைகளை திருப்திகரமாக நிறைவுசெய்ய முடியாது அசௌகரியங்களை எதிர்நோக்கிய அம்மன் மகளிர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு விசேடமாக உணவுத் தேவைக்கு குறிப்பிட்டளவு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.



இங்கு 45 பெண்பிள்ளைகள் பராமரிக்கப் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### *செயற்கைக் கால் பொருத்தும் உதவித் திட்டம்*

கடந்த காலங்களில் உள்நாட்டு யுத்த வன் செயல்களால் தங்களது கால்களை இழந்து செயற்கைக் கால் பொருத்தப்பட்டவர்களின் கால்கள் பாவிக்க முடியாத நிலையில் இருந்தமையை கருத்திற்கொண்டு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கமைய 31 பேருக்கு பிரான்ஸ் தமிழ் உறவுகளால் புதிய செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது.



அத்துடன் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் செயற்கைக் கால்களை புதிதாக பொருத்தவேண்டியவர்கள் மற்றும் திருத்த வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவுவதற்கான ஒழுங்கமைப்பு நமச்சிவாய மூதாளர் பேணலகத்திற் கூடாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மையையும் குறிப்பிடத்தக்கது.

### *முன்பள்ளி அபிவிருத்தி திட்டம்*

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இருந்த புதியவுதயம் முன்பள்ளிக்கு தேவையான தளபாட உதவிகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நமசிவாய மூதாளர் பேணலகம் அம்முன்பள்ளியை வலுவூட்டி செயற்படுத்தி வருகின்றது.

மேலும் அம்முன் பள்ளியில் கல்வி கற்ற போசாக்கு குறைபாட்டுடன் இருந்த பிள்ளைகளுக்கு போசாக்கு உணவுகளும் வழங்கப்பட்டுள்ளது. இதில் தற்போது மூன்று தொடக்கம் ஐந்து வயதிற்குட்பட்ட 60 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்-தக்கது.



மேற்படி உதவித் திட்டங்கள் பிரான்ஸ் சிலோன் சகோதரர்கள் அமைப்பால் நடைமுறைப் படுத்தப் படுவதுடன் வடக்குகிழக்கில் உள்ள மக்களுக்கான உதவித் திட்டங்களை வேறு நிதி வழங்குன ர்களையும் உள்வாங்கி விரிவாக மேற்கொள்ளும் நோக்கில் பிரான்ஸ் உறவுகளால் "நமச்சிவாய மூதாளர் பேணலக பவுண்டேசன்" என்ற பெயரில் அரச சார்பற்ற அமைப்பாக பதிவுசெய்யப்பட்டு கனலங்காள பாற்பண்ணைத் திட்டம், வாழ்வாதார தொழில் மேம்பாட்டுக்கான நுண்கடன் திட்டம் மற்றும் கல்வி மேம்பாட்டுத் திட்டம் போன்றன நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.